கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்

* 112 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கடையநல்லூரில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கையாடல், ஊழல் காரணமாக செயல்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இந்தக் கையாடல்களுக்கு யார் காரணம் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கடையநல்லூரில் இருந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகஸ்தர்களும் சில சிப்பந்திகளும் காரணமாவர் என்று தெரியவருகிறது.

திரு. கே. எ. வகாப் : நிர்வாகக் குறைபாட்டின் காரணமாக இப்போது பல நூற்றுக்கணக்கான ஏழை நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு அவர்கள் தனித்தனியாக தங்கள் தொழிலை விட்டு விட்டு வயிற்றுப்பாட்டிற்குக் கஷ்டப்படுகிற நேரத்தில் கோர்ட்டுக்கு அலைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய கேஸ் இப்போது, நடந்து கொண்டிருந்த இடத்திலிருந்து 40, 50 மைல்களுக்கு அப்பாலுள்ள பாளையங்கோட்டை நடத்தப் படுவதால் முன்பு நடத்தப்பட்டு வந்த இடத்திலேயே நடத்துவதற்கு விண்ணப்பம் செய்திருப்பதாக அறிகிறேன். ஆகவே ஏழை நெசவாளர்களின் நலனை உத்தேசித்து உடனடியாக அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏழை நெசவாளர்களாக இருந்தாலும் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

(இச்சமயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலத்த ஆரவாரம் செய்தார்கள்.)

ஆனால் நீதிமன்றத்தின் அமைப்பைப் பொறுத்து பக்கத்தில் தென்காசிக்கு வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு அரசாங்கம் அனுமதி தந்திருக்கிறது.

Pre-shrunk handloom cloth.

* 113 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the co-optex is marketing pre-shrunk cloth and cloth materials; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU S. MADHAVAN :

(a) Yes.

(b) About 5.50 lakhs sq. metres of handloom cloth has been processed in the Erode plant of co-optex after pre-shrinking and released to various selling units of the co-optex since December 1970 .The sale value of the cloth is of the order of Rs. 20 lakhs.

திரு. என். டென்னிஸ் : இந்த வகை துணி ஆலைகள் மூலம் உற்பத்தி செய்வதற்கும் கைத்தறி மூலம் உற்பத்தி செய்வதற்கும் இடையே ஏற்படும் உற்பத்திச் செலவின் வித்தியாசத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரம் இல்லை.

Dhanushkodi Road.

* 114 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether there is any proposal to reconstruct Dhanushkodi road; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதுரை தனுஷ்கோடி பெருஞ்சாலையை திருத்தி அமைக்க ஏற்கனவே சில வேலைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது அச்சாலையில் பாம்பன் கால்வாயின் குறுக்கே ஒரு சாலைப்பாலம் கட்டும் திட்டத்திற்குத் தான் மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இராமேஸ்வரம், தனுஷ்கோடிக்கு போகக்கூடியவர்கள் இன்னும் பாம்பன் ரயில் பாலம் வழிதான் போகவேண்டியிருக்கிறது. சென்ற சட்டமன்றத் தொடரில் இந்த பாம்பன் பாலம் சீக்கிரமாகக் கட்டி முடிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த பாம்பன் பாலம் சீக்கிரமாகக் கட்டி முடிக்கப்படுவதற்கும் தனுஷ்கோடிக்கு நேராக ரோடு போடுவதற்கும் எவ்வளவு காலம் பிடிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இராமேஸ்வரம் தனுஷ்கோடி சாலைக்கு வேலைகள் நடைபெற்றிருக்கின்றன.

(1) Forming and metalling the road Rameswaram to Dhanushkodi (via) Rameswaram road R. S. Estimate Rs. 15,58,700.

(2) Construction of 24 Nos. of cross drainage works in the road from Rameswaram to Dhanushkodi Estimate Rs. 5,47,155.

(3) Blacktopping the road from Rameswaram to Dhanushkodi (via) Rameswaram road R.S. Estimate Rs. 2,16,000.

(4) Providing Kankar shoulders to the road from Rameswaram to Dhanushkodi road Estimate Rs. 3,35,000.